தென் துளிர்

மாதாந்த இதழ்

தென் துளிர்

மாதம் : மாசி | இதழ் : 02











பிரதேச செயலகம் - தென்மராட்சி

நேர்மையான நிர்வாகம்-சிறந்த பொதுச்சேவை-மக்களின் நம்பிக்கை

சமூர்த்தி வங்கிகளின் பொதுக்கூட்டங்கள்





- தென்மராட்சி பிரதேச செயலக கொடிகாமம் சமூர்த்தி வங்கியின் பொதுச்சபைக்கூட்டமானது உதவி பிரதேச செயலாளரின் பங்குபற்றுதலுடன் 23.01.2026 வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு கொடிகாமம் நாவலடி அ.த.க பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. தலைவராக திருமதி.மு.இராஜராதிகா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

- வரணி சமூர்த்தி வங்கியின் பொதுச்சபைக் கூட்டமானது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளரின் பங்குபற்றுதலுடன் 30.01.2026 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வரணி கலாச்சாரமத்திய நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. தலைவராக திரு.க.குமாரவடிவேல் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.

- தென்மராட்சி பிரதேசசெயலக கைதடி சமூர்த்தி வங்கியின் பொதுசபைக்கூட்டமானது மதிப்பிற்குரிய பிரதேசசெயலாளரின் பங்குபற்றுதலுடன் 13.01.2026 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. தலைவராக திரு.இ.யோகேஸ்வரன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.

- தென்மராட்சி பிரதேச செயலக சமூர்த்தி வங்கிச் சங்கத்தின் பொதுச்சபை நிறைவேற்றுக் குழுத் தெரிவுக் கூட்டமானது மதிப்பிற்குரிய பிரதேசசெயலாளரின் பங்குபற்றுதலுடன் 11.02.2026 புதன்கிழமை மாலை 2.00மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. தலைவராக செல்வி. சதாசிவம் நிலூஷிகா அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்







இதய சத்திரசிகிச்சைக்கான கொடுப்பனவு

சனாதிபதி நிதியத்தின் பிரதேசசெயலகம் வரை பன்முகப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இருதய சத்திரசிகிச்சைக்கான ஆறாவது கொடுப்பனவாக ரூபா250,000/- பெறுமதியான காசோலை சாவகச்சேரி நகர கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த திருமதி நாகர த்தினம் சந்திரலேகா அவர்களுக்கு 02.02.2026 ம் திகதி அன்று



இருதயசத்திர சிகிச்சைக்கான ஏழாவது கொடுப்பனவாக ரூபா 200,000/- பெறுமதியான காசோலை நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திரு B.F.J Seebert அவர்களுக்கு 09.02.2026ம் திகதி அன்று




பிரதேச செயலாளர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிக்கான உதவித்திட்டம்

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் மூன்று நலிவுற்ற கீழ்வரும் மாற்றுத்திறனாளிகளுக்கு 09.02.2026 அன்று அவர்களது வீட்டுக்கு சமூகசேவைகள் உத்தியோகத்தர் நேரடியாகச் சென்று மரத்திலான கட்டில் மற்றும் மெத்தை வழங்கி வைக்கப்பட்டது.

1.சுரேஸ்விதுசாளினி, தனங்கிளப்பு
2.கமல்தாஸ்பிருந்தா ,கெற்பெலி
3.செல்லத்துரைகனகம்மா,
மீசாலைமேற்கு





பொதுசனமாதாந்த உதவிக்கொடுப்பனவு

- மீசாலைமேற்கு மற்றும் மீசாலைகிழக்கு கிராம அலுவலர் அலுவலகங்களில் 03.02.2026 அன்று கிராம உத்தியோகத்தர்,





அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூகசேவைகள் உத்தியோகத்தர் ஆகியோரின் பங்குபற்றலுடன் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு மற்றும் நோய்க் கொடுப்பனவு மீளாய்வு நடவடிக்கையும் இடம்பெற்றது.

- சந்திரபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் 05.02.2026 வியாழக்கிழமை அன்று





- இராமாவில் மற்றும் மீசாலைவடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் 06.02.2026 அன்று





- வெள்ளாம் போக்கட்டி மற்றும் அல்லாரை கிராம அலுவலர் அலுவலகத்தில் 10.02.2026 செவ்வாய்க்கிழமை அன்று





வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்களான முச்சக்கரவண்டி, கழிவுகலநாற்காலி, காற்றுமெத்தை மற்றும் motivation சக்கரநாற்காலி ஆகியன வழங்கப்பட்டதுடன் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு வாழ்வாதார மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்களுக்கான மின்சாரஉபகரணங்களை திருத்துவதற்கான உபகரணங்கள் மற்றும் வெல்டிங் உபகரணங்கள் 19.02.2026 அன்றையதினம் வழங்கிவைக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள்



03/02/2026 திகதி அன்று யா/மீசாலைவிக்னேஸ்வரா மகாவித்தியாலய தரம் 9,10,11 மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனை தொடர்பில் முற்தடுப்பு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.





மதிநிலைமகளிர் நிகழ்ச்சித்திட்டம் (Women Riseup project)

Would Vision நிறுவனத்தின் அனுசரணையில் தென்மராட்சி பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட வரணிவடக்கு, குடமியன் மற்றும் வரணிஇயற்றாலை பிரிவினை சேர்ந்த பெண்தலைமைத்துவ அமைப்புகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான மதிநிலைமகளிர்திட்டம் (Women Rise Up project) நிகழ்ச்சி 10 மற்றும் 11,02.2026 திகதிகளில் தென்மராட்சி பிரதேசசெயலகம் மற்றும் மாவட்டசெயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் வரணிகலாச்சார மண்டபத்தில் நடாத்தப்பட்டது.



















மனிதவள உத்தியோகத்தரது செயற்பாடுகள்

- யா/மிருசுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தரம் 9 , மாணவர்களுக்கான தொகுதி பாடத்தெரிவு மற்றும் தரம் 11 மாணவர்களுக்கான உயர்தர பாடத்தெரிவு தொடர்பான கருத்தரங்கு .
- யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை தரம் 9 , மாணவர்களு க்கான தொகுதி பாடத் தெரிவு மற்றும் தரம் 11 மாணவர்களுக்கான உயர்தர பாடத்தெரிவு தொடர்பான கருத்தரங்கு.
- யா/எழுதுமட்டுவாழ் சிறீகணேசா வித்தியாலய தரம் 9 மாணவர்களுக்கான தொகுதிபாடத் தெரிவு மற்றும் தரம் 11 மாணவர்களுக்கான உயர்தரபாடத் தெரிவு தொடர்பான கருத்தரங்கு .
- யா/அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தரம் 11 மாணவர்களுக்கான உயர்தர பாடத்தெரிவு தொடர்பான கருத்தரங்கு.
- தென்மராட்சிப் பிரதேசசெயலக சமுர்த்திஅபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலையில் உயர்தரத்தில் கல்விகற்கும் சிப்தொர புலமைபரிசில் பெறும் கொடிகாமம் மற்றும் வரணி வலய மாணவர்களிற்கான தொழில் திறவுகோல் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு

பிரதேச செயலகமும் சுதந்திரதின நிகழ்வும்

78ஆவது சுதந்திரதின நிகழ்வானது பிரதேசசெயலாளர் திருF.C .சத்தியசோதி அவர்களின் தலைமையில் காலை 8.30 மணிக்கு பிரதேசசெயலக முன்றலில் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசியகீதம் இசைக்கப்பட்டது.
அதனைத் தொடர்ந்து மட்டுவில் பொருளாதார மத்தியநிலையத்தில் பிரதேசசெயலக உத்தியோகத்தர்களால் சிரமதானபணி மேற்கொள்ளப்பட்டதுடன் மரநடுகை நிகழ்வானது HWPL மற்றும் Green Layer அமைப்பின் அனுசரணை மற்றும் அவர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.








சமுர்த்தி ஆரோக்கிய உணவக திறப்பு விழா

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி ஆரோக்கிய உணவக திறப்பு விழாவானது 06.02.2026 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மதிப்புக்குரிய பிரதேசசெயலாளர் திரு.F.C சத்தியசோதி தலைமையில் ஆரம்பமாகியது .
இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ்மாவட்ட செயலாளர் உயர்திரு ம.பிரதீபன் அவர்களும் சிறப்புவிருந்தினர்களாக சமுர்த்திமாவட்டபணிப்பாளர் திரு .பொ .ஸ்ரீவர்ணன் மற்றும் பிரதிபணிப்பாளர்-குறுநிதி திரு.மகேஷ் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர். சமுர்த்தி ஆரோக்கிய உணவகத்தினை யாழ்மாவட்ட செயலாளர் உயர்திரு ம.பிரதீபன் அவர்களும் சமுர்த்தி மாவட்டப்பணிப்பாளர் திரு .பொ .ஸ்ரீவர்ணன் , பிரதிப்பணிப்பாளர் - குறுநிதிதிரு மகேஷ்பெர்னாண்டோ , பிரதேசசபை கௌரவ தவிசாளர் பொ.குகதாசன் மற்றும் பிரதேச செயலாளர் திரு.F.Cசத்தியசோதி ஆகியோர் இணைந்து ஆரம்பித்துவைத்தனர்.

மேற்படி நிகழ்வினை தொடர்ந்து சமுர்த்தி தேசியவலுவூட்டல் பயனாளிகளிற்கான வாழ்வாதார உதவிவழங்கும் நிகழ்வு இடம்பெற்றது .தொடர்ந்து மாநாட்டுமண்டபத்தில் ஆரம்பித்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றலினை தொடர்ந்து வரவேற்புரையினை சமுர்த்தி தலைமப்பீட முகாமையாளர் அவர்களும் தலைமையுரையினை பிரதேசசெயலாளர் அவர்களும் சிறப்பு விருந்தினர் உரையினை பிரதிபணிப்பாளர்-குறுநிதி திரு.மகேஷ்பெர்னாண்டோ அவர்களும் பிரதமவிருந்தினர் உரையினை யாழ்மாவட்ட செயலாளர் உயர்திரு ம.பிரதீபன் அவர்களும் நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் தனது உரையில் ஆரோக்கிய உணவகத்தின் ஊடாக பயனாளிகளின் வாழ்க்கைதரத்தினை மேம்படுத்த முடியும் எனவும் ஆரோக்கிய உணவத்தினை ஆரம்பிப்பதன் மூலம் பயனாளிகளின் வாழ்கை தரத்தினை மேம்படுத்திடும் முயற்சிக்கு தனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்ததோடு கலந்துகொண்டிருக்கும் மாணவர்கள் கல்வியில் சிறந்தது விளங்க தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். கொடிகாமம் வங்கிற்குற்பட்ட பாடசாலை மாணவர்களிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் அதனை தொடர்ந்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்கான மெச்சுரை வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

















நம்பிக்கை இருந்தால் நாளை நமதே





சமூகபாதுகாப்பு செயற்பாடுகள்

பிரதேசசெயலாளர் F.C.சத்தியசோதி அவர்கள் தலைமையில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் வடக்குகிழக்கு சிரேஷ்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் அவர்களினால் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முழுமையான விளக்கங்கள் 02.02.2026பிரதேச செயலகமாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டது

திட்டமீளாய்வுகூட்டம்

SOND (அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு) நிறுவனத்தின் செயற்திட்டங்கள் எமது பிரிவில் 10 (J/290, J/291, J/295, J/301, J/306, J/308,J/317, J/322, J/338, J/344) கிராமஅலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகிறது. இச்செயற் திட்டமானது பாதிக்கப்பட்ட சமுதாயங்களுக்கும் சேவை வழங்குனர்களுக்கும் இடையே ஒற்றுமையை வலுப்படுத்தும் திட்டமாகும். இது தொடர்பான மீளாய்வுக்கூட்டம் 11.02.2026 ஆம் திகதி பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேசசெயலாளர் திரு.F.C சத்தியசோதி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் திரு.R.திலீபன் அவர்களும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய அதிகாரி திரு.க.ஜெயரூபன் அவர்களும் SOND நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களும் இத்திட்டத்தின் கீழ் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்த பொதுமக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்







பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் நடாத்தும் கண்காட்சி - 2025 இன்று (25.02.2026) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திரு.F.C .சத்தியசோதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணப் பணிப்பாளர் (கிராம அபிவிருத்தி திணைக்களம் வடமாகாணம்) திருமதி . பா. கஜானி அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி .நிருபராஜ்லாகினி அவர்களும் ,சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் திரு . பொன்னையா குகதாசன் அவர்களும், சாவகச்சேரி ஒருங்கிணைப்பு தலைவரின் இணைப்பாளர் திரு. காராளசிங்கம் பிரகாஸ் அவர்களும், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.S .சுனேத்திரா அவர்களும் கலந்து சிறப்பித்தனர் .

"உதிரம் கொடுத்து உயிர்காப்போம்"

எமது முன்னாள் உதவி பிரதேச செயலாளர் திருமதிதமிழினி சதீஸ் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் ஞாபகார்த்தமாக தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிசங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இரத்ததான முகாமானது "உதிரம்கொடுத்து உயிர்காப்போம்" எனும் தொனிப்பொருளில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.







பாரம்பரிய அம்மாச்சி உணவக திறப்புவிழா

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவு நிகழ்ச்சித்திட்டம் - 2025 இன் கீழ் கௌரவ (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் முன்மொழிவில் 3.2 மில்லியன் பெறுமதியில் மண்டுவில் J/304 கிராமஅலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட பாரம்பரிய உணவகமானது (25.02.2026) உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் பிரதேசசெயலாளர், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் ,உபதவிசாளர் நகரசபை சாவகச்சேரி மற்றும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் கௌரவ கைலாயபிள்ளை , கௌரவ கஜிதன் ஆகியோரும் கௌரவ(வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனா (பா.உ) அவர்களின் பிரதிநிதிகள், மண்டுவில். J/304 கிராமமட்ட உத்தியோகத்தர்கள் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோரும் பங்குபற்றினர்.









போதைவஸ்து சம்மந்தமாக வீதிநாடகம்

2026.02.20ம் திகதி எமது தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மட்டுவில்மத்தி (J/312) பிரிவில் Worldvision நிறுவன அனுசரணையில் பால்நிலைசமத்துவம் மற்றும் போதைவஸ்து சம்மந்தமாக வீதிநாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது.







இலவச கண் பரிசோதனை முகாம்

தென்மராட்சி பிரதேசசெயலகம், நல்லூர் கிங்டம் லயன்ஸ் கழகம், தென்மராட்சி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியன STS வைத்தியசாலையுடன் இணைந்து நடாத்திய கண்பரிசோதனை முகாமானது 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேசசெயலாளர் திரு.F.C.சத்தியசோதி அவர்களும் லயன்ஸ்கழக மாவட்ட ஆளுநர் Dr.K.பத்மநாதன் அவர்களும், மாவட்ட கணனி தொழிநுட்ப ஆலோசகர், Dr.S.மனோகரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்திருந்தனர். 230 வரையிலான பயனாளிகள் பங்குபெற்றி பயன்பெற்றதுடன் விசேடமாக கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள தேவையுள்ளவர்கள் இனங்காணப்பட்டனர். இவர்களுக்கான சிகிச்சையினை அவசியத்தன்மையின் அடிப்படையில் நல்லூர் கிங்டம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இலவசமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது இந்நிகழ்வின் விசேட அம்சமாகும்.







திருத்தம் செய்வதற்கான அடையாளஅட்டைக்காக விண்ணப்பிப்பவர்கள்

தேவைப்படும் ஆவணங்கள்

- விண்ணப்பப் படிவம்
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தேச வயதுச் சான்றிதழ் (உத்தேச வயதுச் சான்றிதழ் இணைக்கப்படில் பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் ஓர் ஆவணம்)
- விவாகச் சான்றிதழ் (பெண்களுக்கு மட்டும்)
- 640/= கட்டணம் (140/= தபால் கட்டணம்)
- புகைப்பட அத்தாட்சிப் பிரதி
- பாவித்த அடையாள அட்டை

மேலதிக ஆவணங்கள்
பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லையெனில்

- தேடுதல் விளைவுப் பத்திரம்
- சத்தியக்கடதாசி (50/= முத்திரை)
- பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் ஆவணம்

விவாகச் சான்றிதழ் இல்லையெனில்

- தேடுதல் விளைவுப் பத்திரம்
- சத்தியக்கடதாசி (50/= முத்திரை)
- பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ்

ஒருநாள் சேவைக்காக விண்ணப்பிப்பவர்கள் கிராம அலுவலரிடம் கையொப்பம் பெற்ற பின்னர் படிவத்தினை பிரதேச செயலத்தில் அடையாள அட்டைப் பிரிவிற்கு கொண்டு வரவும்

தேசிய அடையாள அட்டைக்கு விண்ண தேவையான ஆவணங்கள்

தொலைந்த அடையாளஅட்டைக்காக விண்ணப்பிப்பவர்கள்

தேவைப்படும் ஆவணங்கள்

- விண்ணப்பப் படிவம்
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தேச வயதுச் சான்றிதழ் (உத்தேச வயதுச் சான்றிதழ் இணைக்கப்படில் பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் ஓர் ஆவணம்)
- விவாகச் சான்றிதழ் (பெண்களுக்கு மட்டும்)
- 1140/= கட்டணம் (140/= தபால் கட்டணம்)
- புகைப்பட அத்தாட்சிப் பிரதி
- பொலிஸ் அறிக்கை
- அடையா அட்டை பாவித்தமைக்கான சான்று (அடையாள அட்டையின் போட்டோ பிரதி தவிர வேறு ஆவணம்)

மேலதிக ஆவணங்கள்
பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லையெனில்

- தேடுதல் விளைவுப் பத்திரம்
- சத்தியக்கடதாசி (50/= முத்திரை)
- பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் ஆவணம்

விவாகச் சான்றிதழ் இல்லையெனில்

- தேடுதல் விளைவுப் பத்திரம்
- சத்தியக்கடதாசி (50/= முத்திரை)
- பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ்

ஒருநாள் சேவைக்காக விண்ணப்பிப்பவர்கள் கிராம அலுவலரிடம் கையொப்பம் பெற்ற பின்னர் படிவத்தினை பிரதேச செயலத்தில் அடையாள அட்டைப் பிரிவிற்கு கொண்டு வரவும்

புதிதாக அ விண்

தேவைப்படும் ஆவணங்க

- விண்ணப்பப்படிவம்
- பிறப்பு அத்தாட்சிப் உத்தேச வயதுச் சா வயதுச் சான்றிதழ் இ திகதியை உறுதிப்ப
- விவாகச் சான்றிதழ்
- 340/= கட்டணம் (140
- 15 வயது பூர்த்தியை அடையாள அட்டைக் 2500/= தண்டப் பண
- தண்டப் பணம் செலு படிவம்
- புகைப்பட அத்தாட்சி
- இதுவரை அடையாள கொள்ளாமைக்கான உறுதிப்படுத்திய கடி

மேலதிக ஆவணங்கள்
பிறப்பு அத்தாட்சிப் பத்
➢ தேடுதல் விளைவுப்
➢ சத்தியக்கடதாசி (50/
➢ பிறந்த திகதியை உ
விவாகச் சான்றிதழ் இல்
➢ தேடுதல் விளைவுப்
➢ சத்தியக்கடதாசி (50/
➢ பிள்ளையின் பிறப்புச்

**ஒருநாள் சேவைக்காக
கிராம அலுவலரிடம் கை
படிவத்தினை பிரதேச
அட்டைப் பிரிவிற்கு**

பிறருக்கு உதவுவதே மனிதத்தின் உயர்வு

வாழ்க்கை
ஒரு பயணம்
நம்பிக்கை
அதன்
வழிகாட்டி



மனதில்
உறுதி
வாழ்வில்
வெற்றி

தென் துளிர் இதழ் குழு

- திரு.F.C சத்தியசோதி (பிரதேசசெயலாளர்)
- திருமதி.லாகினி நிருபராஜ் (உதவிபிரதேசசெயலாளர்)
- திருமதி. சுபா தர்சன் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்)
- திரு லோ.ஜெசிகரன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)
- திருமதி.லாவண்யா சதாரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

நூலாக்கக் குழுவினர்

- திருமதி.அ.பிரவீனாஅனுஷியா
- திருமதி. ஸ்ரீ.நிலாணி
- திரு.பொ.சுலக்சனன்
- திருமதி.ச.பிரியா

பொருளடக்கம்

பக்கம் - 01

- சமுர்த்தி வங்கிகளின் பொதுக்கூட்டங்கள்

பக்கம் - 02

- இதய சத்திரசிகிச்சைக்கான கொடுப்பனவு
- பொதுசன மாதாந்த உதவிக்கொடுப்பனவு
- மாற்றுத்திறனாளிக்கான உதவித்திட்டம்

பக்கம் - 03

- போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள்
- மதிநிலை மகளிர் நிகழ்ச்சித்திட்டம்
- மனிதவள உத்தியோகத்தரது செயற்பாடுகள்

பக்கம் - 04

- பிரதேச செயலகமும் சுதந்திரதின நிகழ்வும்

பக்கம் - 05,06

- சமுர்த்தி ஆரோக்கிய உணவக திறப்பு விழா

பக்கம் - 07

- சமூகபாதுகாப்பு செயற்பாடுகள்
  திட்ட மீளாய்வு கூட்டம

பக்கம் - 08

- பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சி

பக்கம் - 09

- பாரம்பரிய அம்மாச்சி உணவக திறப்புவிழா

பக்கம் - 10

- போதைவஸ்து சம்மந்தமான வீதிநாடகம்
- இலவச கண் பரிசோதனை முகாம்

பக்கம் - 11

- தேசிய அடையாள அட்டை விண்ணப்பிக்கத் தேவையான ஆவணங்கள்